# தி.மு.க. மீனவர் அணி

# மாவட்ட அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் நியமனம்! (நான்காவது பட்டியல்)

## அணிச் செயலாளர் டாக்டர் ஏ.ஜோசப் ஸ்டாலின் அறிவிப்பு!

கழகத் தலைவர் அவர்களின் ஆணைப்படி - மாவட்டச் செயலாளர் ஒப்புதலோடு தி.மு.க. மீனவர் அணி அணியின் மாவட்ட அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

**சென்னை வடகிழக்கு மாவட்டம்**

தலைவர் - ஆர்.நவகுமார் எண். 15, 1வது தெரு, காசிகோவில்குப்பம், எண்ணூர், சென்னை-57

துணைத் தலைவர் - டி. சேகர் எண். 18, 1வதுதெரு, பெரியகுப்பம், எண்ணூர், சென்னை-57

அமைப்பாளர் - **கே. தேசிங்கு** எண்.32, எர்ணாவூர்குப்பம், எண்ணூர், சென்னை-99

துணை அமைப்பாளர்கள் - து. அல்லிமுத்து எண். 49சி, 2 வது தெரு, முகத்துவாரக்குப்பம், எண்ணூர், சென்னை - 600054 தழவை எஸ். ரஞ்சித் எண். 2, அம்மன்கோவில்தெரு, தாளங்குப்பம், எண்ணூர், கத்திவாக்கம், சென்னை-57 கே. சம்பத் எண்.97, கங்கையம்மன் கோவில் தெரு, லட்சுமிபுரம், சென்னை-99 என். கோதண்டன் 190சி, சூரபட்டுமெயின்ரோடு, புத்தகரம், சென்னை -99 ஜி. முரளி 26/28, 4வதுதெரு, தாழங்குப்பம், எண்ணூர், சென்னை-57 தே. சக்கரவர்த்தி 8,மெயின்ரோடு, பெரியகுப்பம், எண்ணூர், சென்னை-57 டி. தமிழ்செல்வன் 124, பட்டினத்தார் கோவில் தெரு, திருவொற்றியூர் குப்பம், திருவொற்றியூர், சென்னை-19 அ.து. மணி 4/222, அம்பேத்கார் தெரு, அலமாது, பி, சாந்திநகர், சென்னை-52 சீ. செல்வம், 32, 1 வது தெரு, நெட்டுக்குப்பம், எண்ணூர்-600057 எம். ரமேஷ் எண். 18, திருவொற்றியூர் குப்பம், துலுக்காணத்தம்மன் கோவில் தெரு, சென்னை-19 ஆர். குமரன் எண்.22/47, பஜனை கோவில் தெரு தாழங்குப்பம், எண்ணூர் சென்னை-600057 இரா. பிரகாஷ் எண்.21-ஏ பிளாக், திருச்சினங்குப்பம் திருவொற்றியூர் சென்னை -600019 எம்.எல். வேலன் எண். 205, திருவொற்றியூர் குப்பம், துலுக்காணத்தம்மன் கோவில் தெரு, சென்னை -19 டி. மகேந்திரன் 4, 1வது தெரு, நெட்டுக்குப்பம், எண்ணூர், சென்னை - 600057. த. தேசப்பன் 10ஏ, 2வது தெரு, இராம்மூர்த்தி நகர், எண்ணூர், சென்னை - 600057. எம்.பிரேம்குமார், 178ஏ, பட்டினத்தார் கோவில் தெரு, திருவொற்றியூர், சென்னை - 600019.

**சென்னை வடக்கு மாவட்டம்**

தலைவர் - எஸ்.கே.இளங்கோ 701/22, நாகூரான்தோட்டம், புதுவண்ணாரப்பேட்டை, சென்னை-21

துணைத் தலைவர் - டி. கருணாகரன் 19/10 தாண்டவமூர்த்தி தெரு இராயபுரம் சென்னை-13

அமைப்பாளர் - **பி. சதீஷ்குமார்,** 201, டவர்-19, எம்மார் அப்பார்ட்மெண்ட், 75, வைத்தியநாதன் தெரு, தண்டையார்பேட்டை, சென்னை-600081.

துணை அமைப்பாளர்கள் - எம். டில்லிபாபு 3/2, கிழக்கு மாதாகோயில் தெரு 7வதுசந்து, இராயபுரம், சென்னை-13 கே.சேதுராமன் 27ஏ, 6வதுமெயின்ரோடு, திருவள்ளூர் நகர், சென்னை-118 பா.கோதண்டன் எச் 3ஏ, டி.என்.எச். பி., திருவள்ளுவர் நகர், தண்டையார்பேட்டைசென்னை-81 எ.சுரேஷ் 21 எஸ்.என்.செட்டி 1வதுதெரு காசிமேடு சென்னை-13 ஆ.ஆனந்தன் 6/7 பம்பிங்ஸ்டேஸ்சன்தெரு, இராயபுரம் சென்னை-13 ஆர். ஜெயகுமார் 9/30 காசிபுரம் பி - பிளாக் 10வதுசந்து சென்னை-21. ப. அருண் குமார், 20/60 ஜீவரத்தினம் சாலை, தண்டையார்பேட்டை, சென்னை - 600081. ப. சுரேஷ், எண் 4, ஏ பிளாக், புதுத்தெரு, கக்கன்ஜி காலனி, வியாசர்பாடி, சென்னை - 600039 கே. எம். சேகர், காசிமாநகர் 3வது தெரு, ராயபுரம், சென்னை - 600013. கே. குப்பன், எண்.30/10 ஏ, கணேஷ் காலனி, கணக்கர் தெரு, தண்டையார் பேட்டை, சென்னை - 600081. ம. நல்லதம்பி, 50, ஜீவரத்தினம் சாலை, ராயபுரம், சென்னை - 600013 ம. ஹரி இருஷ்ணன், எண் 38, காசிபுரம், பி பிளாக், 2வது தெரு ராயபுரம், சென்னை - 600013 வா. அன்பரசு, எண் 13/7, காசிபுரம், பி- பிளாக், 9வது தெரு, ராயபுரம், சென்னை - 600013 ப. பிரபாகரன், 443 ஜி எம் பேட்டை, ப.பிளாக், காசிமேடு ராயபுரம், சென்னை - 600013 கி. ரங்கராஜ், 115, கிழக்கு மாதா கோவில் தெரு, ராயபுரம், சென்னை - 600013

**திருநெல்வேலி கிழக்கு மாவட்டம்**

தலைவர் - ஜா. சதீஷ் 205/6 பி. எஸ்.பி.எஸ். தெரு, இராதபுரம்

துணைத் தலைவர் - இ. அல்போன்ஸ், 53/3, மேற்கு தெரு, உவரி.

அமைப்பாளர் - **ச. சகாயபிரபு** 18/154, வடக்குதெரு இடிந்தகரை - 6274104

துணை அமைப்பாளர்கள் - பி. அந்தோணிசெல்வம் 1/7, ராஜாதெரு, உவரி - 627651 அ. சேவியர் ஜார்ஜ் 14, ஆர். சி. தோப்பு தெரு, களக்காடு - 627501 மரியதாஸ் எஸ். டிஜோசப்தெரு, உவரி, இராதபுரம், ஜோசப் ராஜேஷ் 12/314, வடக்கு காலனி இடிந்தகரை திருநெல்வேலி அ.எம். மோகன்தாஸ் 60/4, நேதாஜிதெரு, உவரி - 627651 ஜெ.இஞ்ஞாசி 20/3, மேற்குத் தெரு, கூட்டப்புளி சே. அந்தோணிதாமஸ் 12/187ஏ, வடக்குதெரு, பெருமணல் -627106 அ. ஜான்சன் 5/13, வடக்கு தெரு, கூடுதாழை, குட்டம், இராதபுரம் இளாஸ்டன் 2/20ஏ, கோவில் தெரு, பேரின்பபுரம்,செங்குளம், பாளையங்கோட்டை. சி. வி.அந்தோணி 3/77, அந்தோணி தெரு, உவரி, பி. ராஜேஷ், 12/314 வீரப்பன் காலனி, இடிந்தகரை. சூ. டென்சிங் 5/65,வடக்குதெரு கூடுதாழை, திசையன்விளை வட்டம்

**திருவாரூர் மாவட்டம்**

தலைவர் - கா.கந்தசாமி 5/401. மேலக்காடு, ஜாம்புவானோடை, திருத்துறைப்பூண்டி வட்டம்

துணை தலைவர் - எம்.ஏ.ஹஜ்மைதீன் மேல பத்மசாலவர் தெரு, மன்னார்குடி - 614001

அமைப்பாளர் - **எஸ்.இளங்கோவன்** 11ஏ, பட்டக்காரத் தெரு, திருவாரூர்

துணை அமைப்பாளர்கள் - எம்.அக்பர் அலி 119, புதுகுடியிருப்பு, ஆசாத்நகர், முத்துப்பேட்டை - 614704 பி.பாண்டியன் 3/91, காளியம்மன் கோவில் தெரு, அம்மையப்பன், திருவாரூர். சி.இரவிச்சந்திரன் 3/30, புதுக்குடி தொண்டியக்காடு, திருத்துறைப்பூண்டி வட்டம்-614703 பி. குணசேகரன் 81, வி.ஆர்.என் தெரு,வாழச்சேரி, அத்திக்டை அஞ்சல், கூத்தாநல்லூர் வட்டம்-614013 எம். சுரேஷ் புள்ளவராயன் தோப்பு, அம்பலக்காரத்தெரு, மாத்தூர் & அஞ்சல், வலங்கைமான் வட்டம் - 612801

**கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டம்**

துணை அமைப்பாளர்கள் - ஆர். சின்னதுரை, மிட்டப்பள்ளி பூவத்தி, கிருஷ்ணகிரி. ஜி. வெங்கடேசன், கனமுட்லு, அகசிப்பள்ளி, கிருஷ்ணகிரி. எ. கராமத், சேலம் மெயின் ரோடு, கிருஷ்ணகிரி நகரம், கிருஷ்ணகிரி. கே. ஆர். குமார், கண்ணகானூர், வாலிப்பட்டி, மத்தூர், கிருஷ்ணகிரி.

**தஞ்சை தெற்கு மாவட்டம்**

தலைவர் - எம்.கே.எம். அபுதாஹிர் 4-765, காசிம் அப்பா தெரு, மல்லிப்பட்டினம் - 614723, பேராவூரணி, தஞ்சை.

துணை அமைப்பாளர்கள் - எம். தஸ்தகஹிர் சம்மைபட்டினம், அம்மணிசத்திரம் பேராவூரணி - 614612. வீ. ரகு மஞ்சவயல் ரோடு, தம்பிக்கோட்டை, மறவக்காடு - 614704, பட்டுக்கோட்டை.

**புதுக்கோட்டை வடக்கு மாவட்டம்**

துணை அமைப்பாளர்கள் - ஆரோக்கியசாமி அந்தோணியார் கோவில் தெரு, இலுப்பூர், புதுக்கோட்டை. கோ. பன்னீர் வெட்டன் விடுதி, கறம்பக்குடி, புதுக்கோட்டை. சி. சின்னத்துரை 69, மேட்டுத் தெரு, அன்னவாசல், புதுக்கோட்டை. சி. ராஜேந்திரன் எஎ6, சத்தியமர்த்தி ரோடு, புதுக்கோட்டை. மா. வீரப்பன் கறம்பக்குடி, புதுக்கோட்டை. தி. அற்புதம் ஹென்றி 18, அய்யனார் நகர், புதுக்கோட்டை.

**திருவண்ணாமலை தெற்கு மாவட்டம்**

தி.மு.க. மீனவர் அணியின் திருவண்ணாமலை தெற்கு மாவட்ட அமைப்பாளராக ஏற்கனவே நியமிக்கப்பட்ட சு. பழனிவேல் அவர்கள் மறைவெய்திய காரணத்தால், **என். மாசிலாமணி,** (348, திருமஞ்சன கோபுர தெரு, திருவண்ணாமலை), அவர்கள் திருவண்ணாமலை தெற்கு மாவட்ட மீனவர் அணி அமைப்பாளராக நியமிக்கப்படுகிறார். மேலும், **சு. செந்தில்வேல்,** (55/பி, திருமஞ்சன கோபுர வீதி, திருவண்ணாமலை) அவர்கள் மீனவர் அணி மாவட்ட தலைவராக நியமிக்கப்படுகிறார்.

ஏற்கனவே நியமிக்கப்பட்ட மாவட்ட மீனவர் அணி நிர்வாகிகள் இவருடன் இணைந்து பணியாற்றிட வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 24.2.2024

**டாக்டர் ஏ.ஜோசப் ஸ்டாலின்**
செயலாளர்,
தி.மு.க. மீனவர் அணி.



கழக தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அறிவிப்புக்கிணங்க மதுரை வடக்கு மாவட்ட செயல் வீரர்கள் கூட்டம் வரும் நாடாளுமன்ற தேர்தலில் வெற்றி காண்பது வரும் 26 ஆம் தேதி முத்தமிழ் அறிஞர் கலைஞர் நினைவிடம் திறப்பு விழாவிற்கு திரளானோர் பங்கேற்பது மார்ச் 1 இளைஞர் எழுச்சி தினத்தை மாவட்டம் முழுவதும் சிறப்பாக கொண்டாடுவது குறித்த ஆலோசனைக் கூட்டத்தில் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் மதுரை வடக்கு மாவட்ட செயலாளர் பி.மூர்த்தி சிறப்புரையாற்றினார். உடன் கழக நிர்வாகிகள் எம.ஆர்.எம்.பாலசுப்பிரமணியன், ஆ.வெங்கடேசன் எம்.எல்.ஏ., வடிவேல் முருகன், சேகர், ரோகிணி பொம்மை தேவன், நேரு பாண்டியன் தொகுதி பொறுப்பாளர்கள் பெருநாழி போஸ், ஆனந்த் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



சிவகங்கை மாவட்டம், சிங்கம்புணரி சேவுகப் பெருமாள் அய்யனார் கோவில் அருகில் திருப்பத்தூர் சாலையில் உள்ள எஸ்.எஸ்.குழுமத்தின் எஸ்.எஸ்.மெட்ரிக் பள்ளியின் 14ஆம் ஆண்டு விழாவில் அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் கலந்துகொண்டு சிறப்பித்தார். இதில் சந்திர சேகர், செந்தில்குமார், ராஜேஸ்வரி, ராதாகிருஷ்ணன் மற்றும் ராமா அருணகிரி, அம்பலம் முத்து, இந்தியன் செந்தில் பூமிநாதன், பாலசுப் பிரமணியன், கதிர்வேல், சிவக்குமார், ராசு, புகழேந்தி, சோமசுந்தரம் உள்ளிட்ட கழகத்தினர் பங்கேற்றனர்.

### சிவகங்கை மாவட்டம் – சிங்கம்புணரியில்

# எஸ்.எஸ்.குழுமத்தின் எஸ்.எஸ்.மெட்ரிக் பள்ளியின் 14ஆம் ஆண்டு விழா!

## அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் - மாணவர்களுக்கு பரிசு வழங்கி சிறப்புரை!

*சிங்கம்புணரி, பிப், 25_*

எஸ்.எஸ்.குழுமத்தின் எஸ்.எஸ்.மெட்ரிக் பள்ளியின் 14ஆம் ஆண்டு விழா. கூட்டுறவுத்துறை அமைச்சர் பெரிய கருப்பன் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு சிறப்பித்தார்.

சிவகங்கை மாவட்டம் சிங்கம்புணரி சேவுகப்பெருமாள் அய்யனார் கோவில் அருகில் திருப்பத்தூர் சாலையில் உள்ள எஸ் எஸ் குரூப்ஸ் இன்ஸ்டியூட் ஆப் எஸ் எஸ்ஏ கல்லூரி குழுமத்தின் எஸ் எஸ் மெட்ரிக் பள்ளியின் 14 ஆம் ஆண்டு விழா நேற்று கொண்டாடப்பட்டது பள்ளியின் முதல்வர் ராஜேஸ்வரி விழாவிற்கு வருகை தந்த அனைவரையும் வரவேற்றனர். எஸ் எஸ் குழுமத்தின் செயலாளர் சந்திரசேகர் ,தாளாளர் செந்தில்குமார் ஆகியோர் விழாவிற்கு தலைமை தாங்கினார்கள். விழாவிற்கு சிறப்பு அழைப்பாளராக கூட்டுறவு துறை அமைச்சர் பெரிய கருப்பன் மற்றும் முன்னாள் முதன்மை கல்வி அலுவலர் ராதாகிருஷ்ணன் ஆகியோர் கலந்துகொண்டு சிறப்பித்தார் . எஸ் எஸ் மெட்ரிக் பள்ளியின் ஆண்ட அறிக்கையை பள்ளியின் முதல்வர் ராஜேஸ்வரியும், எஸ் எஸ் ஏ கல்லூரி ஆண்டறிக்கையை முதல்வர் உமா ஆகியர் வாசித்து வரவேற்புரை ஆற்றினார்.

முன்னதாக விழா தொடக்கத்தில் கூட்டுறவுத்துறை அமைச்சர் பெரிய கருப்பன் குத்து விளக்கேற்றி விழாவை தொடக்கி வைத்தார். தொடர்ந்து ஆண்டுவிழா நிகழ்ச்சியில் பள்ளி மாணவ மாணவியர்கள் முன்னிலையில் அமைச்சர் பெரிய கருப்பன் சிறப்புரையாற்றினார்.

மேலும் கடந்த ஆண்டு பத்தாம் வகுப்பில் முதல் மூன்று இடங்களை பெற்ற மாணவர்களுக்கு சான்றிதழ் மற்றும் பரிசுகள் வழங்கப்பட்டன மேலும் பல் வேறு போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ அமைச்சர் பெரிய கருப்பன் பரிசு சான்றிதழ்கள் வழங்கினார்.

தொடர்ந்து பள்ளி மாணவ மாணவியர்களின் கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றது நிகழ்ச்சிக்கு முன்னால் எம்.எல்.ஏ. ராமா அருணகிரி, பேரூராட்சி மன்ற தலைவர் அம்பலம் முத்து, துணைத்தலைவர் இந்தியன் செந்தில், திமுக ஒன்றிய செயலாளர்கள் பூமிநாதன் பாலசுப்ரமணியன், திமுக நகர செயலாளர் கதிர்வேல், திமுக நகர அவை தலைவர் சிவக்குமார் ஒன்றிய அவைத்தலைவர் ராசு எஸ் எஸ்ஏ எஸ் எஸ் கல்வி குழுமத்தின் இயக்குனரும் திமுக அயலக அணியின் மாவட்ட துணை அமைப்பாளர் புகழேந்தி, பொதுக் குழு உறுப்பினர் சோமசுந்தரம் ஒன்றிய துணை செயலாளர்கள் சிவபுரி சேகர், முத்துக்குமார், ஷீலா சொக்கநாதன் தொழிலாளர் அணி மாவட்ட துணை தலைவர் ஞானி செந்தில், திமுக ஒன்றிய பொருளாளர் பாஸ்கரன், நகர பொருளாளர் செந்தில் கிருஷ்ணன், சினிமா தயாரிப்பாளர் முருகேசன், முறையூர் ஊராட்சி மன்ற தலைவர் சுரேஷ், மாவட்ட பிரதிநிதி செல்வகுமார், தனுஷ் கோடி, நகர விவசாய அணி அமைப்பாளர் பரிஞ்சி சரவணன் மற்றும் மாணவ மாணவிகளின் பெற்றோர்கள் உள்ளிட்ட ஏராளமானோர் ஆண்டு விழா நிகழ்ச்சி மற்றும் கலைநிகழ்ச்சியை கண்டு ரசித்தனர். ஆண்டு விழா நிகழ்ச்சி தொகுப்பை பள்ளியின் ஆசிரியர்கள் மீனா, சங்கீதா ஆகியோர் தொகுத்து வழங்கினார்கள் எஸ் எஸ் ஏ இன்ஸ்டியூட் ஆப் எஸ் எஸ் குழுமத்தின் சார்பில் நடைபெற்ற ஆண்டு விழா நிகழ்ச்சி க்கான ஏற்பாடுகளை பள்ளியின் நிர்வாகம் மற்றும் ஆசிரியர்கள் செய்திருந்தனர் நிகழ்ச்சி நிறைவில் ஆசிரியர் பூமிநாதன் நன்றி உரையாற்றினார்.

### தென்மாவட்டங்களில் கனமழையால் பாதிக்கப்பட்ட

# 2,60,909 விவசாயிகளுக்கு ரூ.201.67 கோடி நிவாரணம்!

## தமிழ்நாடு அரசு உத்தரவு!

சென்னை, பிப்.25-

தமிழ்நாட்டின் தென்மாவட்டங்களில் கடந்த ஆண்டு டிசம்பர் 17 மற்றும் 18 ஆகிய நாட்களில் வரலாறு காணாத அதிகனமழைப் பொழிவு ஏற்பட்டது. தென்மாவட்டங்களின் பல பகுதிகளில் சராசரி ஆண்டு மழையளவை விட கூடுதலாக ஒரே நாளில் அதிகளவு மழைப்பொழிவு ஏற்பட்டது.

அதிகனமழையினை தொடர்ந்து ஏற்பட்ட வெள்ள பாதிப்பால், பொதுமக்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டதோடு, வேளாண் மற்றும் தோட்டக்கலைப் பயிர்களுக்கும், பொது மற்றும் தனியார் கட்டமைப்புகளுக்கும் பெரும் சேதம் ஏற்பட்டது.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களில் பாதிப்பிற்குள்ளான பகுதிகளை 21.12.2023 அன்று பார்வையிட்டு மிகக் கடுமையான வெள்ள பாதிப்பிற்குள்ளான பகுதிகளைச் சேர்ந்த குடும்பங்களுக்கு நிவாரண உதவிகளை வழங்கி, மழை வெள்ளத்தால் பாதிப்பிற்குள்ளான பயிர்களுக்கான நிவாரணம் உள்ளிட்ட பல்வேறு நிவாரணத் தொகுப்புகளை அறிவித்தார்.

அதன் அடிப்படையில், தென் மாவட்டங்களில் ஏற்பட்ட கனமழை மற்றும் பெரு வெள்ளத்தின் காரணமாக திருநெல்வேலி, தூத்துக்குடி, தென்காசி, கன்னியாகுமரி, விருதுநகர், இராமநாதபுரம், சிவகங்கை மற்றும் மதுரை ஆகிய 8 மாவட்டங்களில் பாதிப்பிற்குள்ளான 1,64,866 ஹெக்டேர் வேளாண் பயிர்களுக்கு, 1,98,174 விவசாயிகள் பயனடையும் வகையில் 160 கோடியே 42 இலட்சத்து 41 ஆயிரத்து 781 ரூபாய் நிவாரணம் வழங்கிடவும், 38,840 ஹெக்டேர் தோட்டக் கலைப் பயிர்களுக்கு 62,735 விவசாயிகள் பயனடையும் வகையில் 41 கோடியே 24 இலட்சத்து 74 ஆயிரத்து 680 ரூபாய் நிவாரணம் வழங்கிடவும், மாநில பேரிடர் நிவாரண நிதியிலிருந்து நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, பாதிக்கப்பட்ட மொத்தம் 2,60,909 விவசாயிகளுக்கு 201 கோடியே 67 இலட்சத்து 16 ஆயிரத்து 460 ரூபாய் நிவாரண நிதி வழங்கிட வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறையால் அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

மேற்படி நிவாரணத் தொகையினை விவசாயிகளின் வங்கி கணக்கில் நேரடியாக வரவு வைக்க உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.


# சேலம் மத்திய மாவட்டக் கழக கூட்டம்!

சேலம், பிப். 26–

சேலம் மத்திய மாவட்டத்திற்குட்பட்ட சேலம் தெற்கு சட்டமன்ற தொகுதியில் ‘ மாவட்ட கழக செயலாளர்கள் கூட்டத்தில் எடுத்த முடிவின்படி கழக நிர்வாகிகள். BLA2. பூத் கமிட்டி உறுப்பினர்கள். உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள் அடங்கிய கூட்டத்தில் திண்ணை பிரச்சாரம் தொடங்கி இல்லந்தோறும் சென்று கழக அரசின் ஆட்சியில் செய்த சாதனைகளை கூறி, துண்டறிக்கைகளை வழங்கியும் இல்லந்தோறும் ஸ்டாலின் குரல். பரப்புரையை மேற்கொள்ள ஆலோசனைகளை மாவட்ட கழக செயலாளர் இரா.இராஜேந்திரன் எம்.எல்.ஏ. வழங்கினார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### குளித்தலை இளமுருகு
### பிப்ரவரி 26 (2000)



திராவிட இயக்கத்தின் வளர்ச்சியிலே அடிநாள் தொட்டு அக்கறையோடும் ஆர்வத்தோடும் ஈடுபாடு கொண்டு உழைத்தவர்.

தலைவர் கலைஞர் அவர்களின் ஆரம்பகாலத் தோழர்களில் ஒருவர்.

தலைவர் கலைஞர் அவர்கள் 1957ல் குளித்தலை சட்டமன்றத் தொகுதியில் போட்டியிட்டபோது வெற்றிக்கு அடித்தளமாக இருந்து உழைத்தவர்களில் இவரும் ஒருவர்.

காதல் கலப்புமணம் செய்தவர். ஆண்பெண் சம உரிமையை நிலைநாட்டிட வேண்டுமென்பதற்காகவே தன் பெயரோடு தன் மனைவியின் பெயரையும் இணைத்துக் கொண்டு “இளமுருகு பொற்செல்வி” என்றே தம்மை அழைத்துக் கொண்டவர்.

1991ஆம் ஆண்டு நடைபெற்ற முப்பெரும் விழாவில் தலைவர் கலைஞர் அவர்கள் இவருக்கு ‘அண்ணா’ விருது வழங்கிச் சிறப்பித்துள்ளார்.

“கழகத் தொண்டர்கள் உள்ளத்தில் வரலாற்றுச் சிறப்போடு வாழ்பவர்” என தனது இரங்கல் செய்தியில் தலைவர் கலைஞர் தெரிவித்துள்ளது சிறப்பாகும்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**